சார்க் தலைவர் பிரேமதாஸாவின் ஆலோசனையை

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 புரட்டாதி 21 இதழ் 239
யாழ்ப்பாணம் புதன்கிழமை 07 — 10 — 1992

இந்தியா நிராகரித்தது!

(லண்டன்)

இந்தியா–பாகிஸ்தான் ஆகிய நாடுகள் அவற்றின் பிரச்னைகளை பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று இலங்கை ஜனாதிபதி ஆர் பிரேமதாசா கூறிய ஆலோசனையை இந்தியா நிராகரித்துள்ளதென்று

(4-ம் பக்கம் பார்க்க)

ஜனாதிபதிக்கு விமான நிலையத்தில் பலத்த பாதுகாப்பு

(கொழும்பு)

'சார்க்' நாடுகளுக்கான தமது விஜயத்தை முடித்துக் கொண்டு ஜனாதிபதி பிரேமதாஸா குழுவினர் நேற்று கொழும்பு வந்து சேர்ந்தனர் ஜனாதிபதிக்கு விமான நிலையத்தில் என்றுமில்லாவாறு பலத்த பாதுகாப்பு வழங்கப்

[4ம் பக்கம் பார்க்க]

பூநகரியில் புலிகள் தாக்கு இரு சிப்பாய்கள் பலி

(கொழும்பு)

பூநகரி இராணுவ முகாம் மீது விடுதலைப்புலிகள் நேற்று மேற்கொண்ட தாக்குதலின் இராணுவ சிப்பாய் ஒருவர் ஸ்தலத்தில் கொல்லப்பட்டதாகவும் இருபடையினர் காயமடைந்தனரெனவும் இராணுவ சிரேஷ்ட அதிகாரிகள்

(4ம் பக்கம் பார்க்க)

★ வரவு-செலவுத் திட்டத்தில்

பாதுகாப்புச் செலவு அதிகரிப்பு

துண்டுவிழும் தொகை 4,640 கோடி ரூபா!

போர் நடவடிக்கைக்கென 2,000 கோடி ரூபாவுக்கு மேல் ஒதுக்கப்படும்?

(கொழும்பு)

புதிய வரவு-செலவுத்திட்டத்தில் பாதுகாப்பு செலவுகள் பெருமளவு அதிகரித்துள்ளன. வடக்கு - கிழக்குப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் போர் நடவடிக்கைகளுக்கென 2000 கோடி ரூபாவுக்கு மேல் இந்த வரவு செலவத் திட்டத்தில் ஒதுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அண்மைக்காலமாக விடுதலைப்புலிகளின் தாக்குதல் நடவடிக்கைகள் அதிகரித்து வருவதன் காரணமாகவே பாதுகாப்பு செலவுகளை அதிகரிக்க அரசு முடிவு செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. பாதுகாப்பு செலவுகளில் அதிகரிப்பு ஏற்பட்டிருப்பதன் காரணமாக வரவு செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகை என்றுமில்லாதவாறு 4640 கோடி ரூபாவாக அதிகரித்துள்ளது. (4ம் பக்கம் பார்க்க)

★ கூட்டுறவுச் சங்கங்கள்

தேவையான அளவு மண்ணெண்ணை எடுத்துவர அரசு அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் தமது தேவைக்கு வேண்டியளவு மண்ணெண்ணையைக் கொண்டு வருவதற்கு முப்படைத் தலைமைச்செயலகம் அனுமதியளித்துள்ளதாக யாழ். அரச அதிபர் தெரிவித்தார்.

இதேபோல் இராணுவத்தினால் தடை செய்யப்பட்ட பொருள்களைத் தவிர மற்றும் அனைத்துப் பொருள்களையும் தனியார் வர்த்தகர்களும் கப்பல் மூலம் கொண்டு செல்லலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கப்பல் மூலம் கொண்டுவரப்படும் பொருள்களுக்கு ஒரு மெற்றிக் தொன்னுக்கு 2850 ரூபா கட்டணம் அறவிடப்

(4ம் பக்கம் பார்க்க)

வடபகுதி மாணவர்களின் பாடசாலை உபகரணப் பொருட்களில் மோசடி!

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்த தமிழ் மாணவர்களுக்கு வெளிநாட்டுத் தொண்டர் ஸ்தாபனங்கள் வழங்கிய பாடசாலை உபகரணங்களில் அரசு பெரும் மோசடி செய்துள்ளது தற்போது தெரிய வந்துள்ளது கொப்பிகள், பென்சில்கள், கலர்ப்பெட்டிகள், கொம்பாஸ்

(4-ம் பக்கம் பார்க்க)

மீட்பு நிதி பணமாக மட்டுமே பெறப்படும்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 14ம் திகதியிலிருந்து ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கும் நேரடியாகச் சென்று மீட்பு நிதி பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறை அறிவித்துள்ளது.

(4ம் பக்கம் பார்க்க)

பெய்யும் மழை நீர் பெயராதிருந்தால்
செய்யும் தொழிலும் சிறப்படையும்.

மண்ணெண்ணை, தீப்பெட்டி அனுப்புமாறு வேண்டுகோள்

(திருநெல்வேலி)

மண்ணெண்ணை, தீப்பெட்டி போன்றபொருட்களை உடனே யாழ். மாவட்டத்துக்கு அனுப்பிவைக்கும்படி யாழ் அரச அதிபர் வர்த்தக மாணிக்க வாசகர் நேற்று கொழும்புக்கு

(4-ம் பக்கம் பார்க்க)

பல்கலைக்கழக மாணவர்க்கு ம.எண்ணை விநியோகம்

[திருநெல்வேலி]

யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு குறைந்த விலையில் ஒருவருக்கு தலா 3 லீற்றர் வீதம்மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது.

அனைத்துப்பீட மாணவர்களும் தமது அடையாள அட்டையைக்காட்டி மண்ணெண்ணெய் பெற்றுக்கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது.

ஒரு லீற்றர் 10 ரூபா வீதம் இந்த மாணவர்களுக்கு மண்ணெண்ணை விநியோகிக்கப்படுவதுகுறிப்பிடத்தக்கது 157

பருத்தித்துறையில்

மீனவர்மீது பீரங்கித் தாக்குதல்

(புலோலி)

பருத்தித்துறைக் கடற்பரப்பில் வள்ளங்களில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் மீது நேற்றுக்காலை கடற்படையினர் பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இன்பருட்டி என்னும் பகுதியில் மீனவர்கள் வழமைபோல் கரையோரத்தில் சிறு சிறு வள்ளங்களில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது கடற்படை வள்ளமொன்றில் கடலில் ரோந்து வந்த கடற்படையினர், மீனவர்களை நோக்கிப் பீரங்கி வேட்டுக்களை மேற்கொண்டனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

கிளாலிப் பகுதியில்

படகுகள்மீது கடற்படைதாக்கு 4 பேர் பலி; ஒருவர் கைது

(கொழும்பு)

கிளாலிப் பகுதியில் பயணம் செய்து கொண்டிருந்த கண்ணாடி இழையிலான படகுகள் மீது ஸ்ரீலங்கா கடற்படையினர் நேற்று முன்தினம் மேற்கொண்ட தாக்குதலில் 6 படகுகள் அழிக்கப்பட்டதாகவும் 4 பேர் கொல்லப்பட்டுள்ளதாகவும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் உயர்

(4-ம் பக்கம் பார்க்க)

வரி விளம்பரம்

வல்லாரைக் குளிகை

இயற்கை வல்லாரைச் சாற்றில் தயாரித்த GOTU KOLA Capsules கிடைக்குமிடம் எஸ். ரி. மெடிக்கல்ஸ் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-6848]

பாகற்காய் குளிகை

சலரோக நோயைக் கட்டுப்படுத்தக்கூடிய KARAWILLA Capsules கிடைக்குமிடம் எஸ். டி. மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம், (சி-6841)

தேவை

றபர் ஸ்ராம் ஓவிய வேலை தெரிந்தவர்களும், பழகுவதில் ஆர்வமுள்ள O/L சித்தியடைந்த இருபாலாரும் நேரில் வரவும். செல்வம் ஆட்ஸ், கே. கே. எஸ். வீதி, சுன்னாகம். [சி-6867]

அறிவுக்களஞ்சியம்

உயர்கல்வி மாணவருக்கும் பாடசாலைக்கல்வி மட்டும் போதாது. பரந்துபட்ட பொது அறிவும் மிக அவசியம். பொது அறிவை வளர்க்கும் நோக்குடையது 'அறிவுக்களஞ்சியம்' நாலாவது இதழ் விற்பனையாகிறது. ரூபா 10 உங்கள் விற்பனையாளரிடம் கேளுங்கள். (எ-2488

வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்புநோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சரும நோய்கள், மாதவிடாய்க் கூத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல் மகப்பேறின்மை, வீரியக் குறைவு மூலவியாதிகள்; மூத்திரரோகங்களில் பிரபலமானவர்; சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர் சி. இராசரத்தினம் 121, 2-ம் ஒழுங்கைத் தெரு யாழ்ப்பாணம். (சி-6855)

துரித மீட்டற் பயிற்சி (ஆண்டு 5 — 4)

வெளிவந்து விட்டது. பிரபல பாடசாலை ஆண்டு 6 அனுமதிப்பரீட்சைக்கும், ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கும் ஏற்ற வகையில் புதிய கல்வி நிலையத்தால் புதிதாக வெளியிடப்பட்ட துரித மீட்டற் பயிற்சியை (விடைகளுடன் 15 மாதிரிப் பயிற்சிகளைக் கொண்டது புதிய கல்வி நிலையத்திலும் யாழ்நகர் பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். [சி-6866)

இராசி பலன்

07-10-1992
புதன்கிழமை
(தமிழுக்கு புரட்டாதி 21)

ஏகாதசி பி. ப 4 59 வரை அவிட்டம் பி இ 1-39 வரை இராகுகாலம் பகல் 12-02 முதல் 1 35 வரை, சுபநேரம் மாலை 4-32 முதல் 6 02 வரை மரணயோகம் ஏகாதசி விரதம்.

மேடம்! பிரச்னைக்கு தீர்வு எதிர்பாராத நன்மை, பயணம்.

இடபம்: முறையான செலவுகள், புதிய முயற்சி, பாராட்டு

மிதுனம்: ஆபத்தில், தப்பித்தல், ஏமாற்றம், கருத்து வேறுபாடு.

கடகம்: உறவினர்களால் குழம்பம், பாதிப்பு, மனப்பயம்.

சிங்கம்: நண்பர்கள் ஆதரவு பணவரவு, அறிஞர் சந்திப்பு.

கன்னி; புதிய திருப்பம், மருத்துவசெலவு, குடும்பசுகம்

துலாம்; மனக்குழப்பம், காரணமற்றகோபம், அலைச்சல்.

விருச்சிகம்: எதிர்ப்பு, தொழில் பகை, அவமதிப்பு.

(4ம் பக்கம் பார்க்க)

93 ஜூனுக்குப் பின்னரும்

மகளிர் பொற்கணக்கு நீடிக்கப்படலாம்

(உடுவில்)

1993ம் ஆண்டு ஜூன் மாதம் வரை இலங்கை வங்கியால் செயற்படுத்தப்படும் மகளிர் பொற்கணக்குத் திட்டம் அக்காலத்தின் பின்னர் மீளாய்வு செய்யப்பட்டு வங்கியினால் நீடிக்கப்படலாம். இத்திட்டம் நிறுத்தப்படும் இடத்து ஆரம்பிக்கப்பட்ட கணக்குகள் சாதாரண சேமிப்புக்கணக்குக்கு மாற்றப்படும். வங்கியில் சிக்கன சேமிப்புத் திட்டத்தில் பெண்களை ஈடுபடுத்துவதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும்.''

சர்வதேச மகளிர் ஆண்டை முன்னிட்டு இலங்கை வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்ட மகளிர் பொற்கணக்கு சந்தைபடுத்தல் பிரசாரவேலைகளை மேற்கொண்டுள்ள சுன்னாகம் இலங்கை வங்கி உப முகாமையாளர் திரு சி. குமாரசாமி இவ்வாறு கூறினார்.

சந்தைப்படுத்தும் பிரசார வேலைகளை மேற்கொண்டு உப முகாமையாளரும், பிரதம லிகிதர் திரு த தர்மஜெயசூரியரும் பாடசாலை ஆசிரியர் மாணவர் மத்தியில் விளக்கமளித்து வருகின்றனர்.

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையில் இவர்கள் பிரச்சார வேலைகளை மேற்கொண்டபோது இதனை தெரிவித்தனர். [109]

காமினி திஸநாயக்காவின் செயலர் பிணையில் விடுதலை

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் திரு காமினி திஸநாயக்காவின் முன்னாள் செயலர் திரு, பாலித பெல்பொல கொழும்பு நீதிமன்றினால் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் வழக்கு தீர்ப்புக்கு எதிராக இவர் துண்டுப்பிரசுரங்கள் விநியோகித்ததாக குற்றம் சாட்டப்பட்டு தேடப்பட்டபோது இவர் சி. ஐ. டி பொலிஸாரிடம் சரணடைந்திருந்தார்.

தனக்கும் இந்த துண்டுப் பிரசுர விநியோகத்திற்கும் எதுவித தொடர்புமில்லையென இவர் மறுத்திருந்தார். இதையடுத்து பத்தாயிரம் ரூபா சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டார். (சி)

சுகாதார அமைச்சின்

அந்தரங்க காரியதரிசி எய்ட்ஸுக்கு மரணம்

(கொழும்பு)

சுகாதார அமைச்சின் அந்தரங்க காரியதரிசியான பெண் ஒருவர் எயிட்ஸ் நோயினால் கடந்தவாரம் கொழும்பில் மரணமாகியுள்ளார்.

சுகயீனம் காரணமாக கொழும்பு பெரியாஸ்பத்திரியில் மேற்படி பெண் அனுமதிக்கப்பட்டபோது இவரின் இரத்தம் பரிசோதிக்கப்பட்டதில் எயிட்ஸ் நோய் இருப்பது தெரியவந்தது. தனிமைப்படுத்தப்பட்டு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டபோதிலும் இவர் கடந்த வாரம் இறந்து விட்டார்.

32 வயதான இந்த அந்தரங்கக் காரியதரிசி இரண்டுபிள்ளைகளின் தாயாவர். நுகேகொடையைச் சேர்ந்த இவர் இறந்ததும் இவரின் உடல் பலத்த பாதுகாப்பின் மத்தியில் எரிக்கப்பட்டது. [வி-எஸ்]

புடவைக் கடை உடைக்கப்பட்டு கொள்ளை

(பட்டைதீட்டுப்பு)

இணுவில் பிரதான வீதியிலுள்ள புடவைக்கடையொன்று இரவு வேளையில் உடைக்கப்பட்டு அங்கிருந்த பல ஆயிரக்கணக்கான சாரிகள் துணி வகைகள் திருடப்பட்டுள்ளன.

பண்டத்தரிப்பு பஜார் வீதியில் புடவைக்கடை வைத்திருந்த ஒருவர் இராணுவ நடவடிக்கையினால் இடம் பெயர்ந்து இணுவிலில் திறந்திருந்த புதிய புடவைக்கடையிலேயே இத்திருட்டு நடைபெற்றது.

அண்மைக்காலமாக யாழ்ப்பாணப் பகுதியில் இரவு வேளைகளில் கடைகள் உடைக்கப்பட்டு கொள்ளையிடப்படும் சம்பவங்களும் சைக்கிள்திருட்டுகளும் அதிகரித்துள்ளன. (72)

லீக் உதைபந்தாட்டம்

பாடும்மீன், வைக்கிங்ஸ் கழகங்கள் சாம்பியன்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்ட லீக் விளையாட்டுக்கழகங்களிடையே நடாத்திவந்த உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் 'ஏ' பிரிவில் பாடும்மீன் கழகமும், 'பி' பிரிவில் வைக்கிங்ஸ் கழகமும் சாம்பியன் கேடயத்தை தட்டிக்கொண்டன.

'ஏ' பிரிவு சாம்பியன்மோதலில், பாடும்மீன கழகமும் பாஷையூர் சென். அன்ரனிஸ் கழகமும் மோதின. இம்மோதலில் ஆட்டம் தொடங்கி முடிவடையும் வரை இரு கழகங்களும் சிறப்பாக விளையாடி தலா ஒருகோல்களைப் பெற்றிருந்தன.

இதன்பின்பு வழங்கப்பட்ட மேலதிக நேரத்தில் பாடும்மீன் கழகம் மிகவேகமாகவும் சாதுரியமாகவும் விளையாடி அடுத்தடுத்து இருகோல்களைப் போட்டு 3-1 கோல்களால் வெற்றிபெற்றது.

மேற்படிபோட்டியின் ஆரம்பத்தில் இருகழக வீரர்களும் யாழ். உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் திரு. எஸ். வி. கணநாதனுக்கு அறிமுகம் செய்துவைக்கப்பட்டனர்.

போட்டியின் இறுதியில் யாழ். மாவட்டவிளையாட்டு அபிவிருத்திக்குழுவின்செயலாளர் திரு முருகேசன் பரிசில்களை வழங்கினார்.

'பி' பிரிவில் வைக்கிங்ஸ் கழகம் சென். ரோக்ஸ் கழகத்தை வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது. [வி]

இடம்பெயர்ந்த

இரணைதீவு மக்கள் நாச்சிக்குடாவில் தஞ்சம்

(உடுவில்)

இரணைதீவு மக்களுக்கு பல செயற்சிட்டங்களுடன் குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்திகொடுக்க கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. கே. பொன்னம்பலம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் நடவடிக்கைகளை துரிதப்படுத்தி வருவதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இராணுவ நடவடிக்கையால் இரணைதீவிலிருந்து இடம்பெயர்ந்த மக்களை நாச்சிக்குடா கிராமத்தில் குடியிருத்த பல வசதித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இடம்பெயர்ந்த மக்களுக்கு வீடுகட்டுவதற்கு ஒரு ஏக்கர் வீதம் மேட்டு நிலம் வழங்கவும் மாதத்தில் ஒரு முறை நாச்சிக்குடாப் பாடசாலையில் தாய், சேய் மருத்துவ பரிசோதனை நடத்த நடவடிக்கை எடுக்கவும் பொதுநிறுவனங்களின் உதவியுடன் குடிசைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கவும் அத்தியாவசிய உலர் உணவுப் பொருள்கள் வழங்க நடவடிக்கை எடுக்கவும் இப்பகுதி மக்களின் கருவாட்டை சந்தைப்படுத்துவதற்கு கிளிநொச்சியில் வர்த்தக நிலையம் ஒன்றை ஆரம்பிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (109)

நூல் வெளியீடு

(நெல்லியடி)

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் பிரதிப் பொறுப்பாளர், மேஜர் பாரதியின் காதோடு சொல்லி விடு' நூல் வெளியீட்டு விழா இன்று 7ம் திகதி மாலை 5 மணிக்கு கரவெட்டி விநாயகேஸ்வராக கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பினால 'சீதன அம்புகள்' எனும் நாட்டிய நாடகமும் இடம்பெறுவதுடன், விடுதலைப் புலிகளின் பல முக்கிய பிரமுகர்களும் கலந்துகொள்கின்றனர். (160)

இடிந்து விழும் கட்டிட சுவர்கள்

(அரியாலை)

யாழ். காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு அருகிலுள்ள வேம்படி ஆஸ்பத்திரி வீதிச் சந்தியில் விமானத் தாக்குதலால் சேதமுற்ற கட்டிடத்தில் மழைநீர் உட்புகுந்ததால் அதிலுள்ள சுவர் சிதறல்கள் 5ம் திகதி இரவு விழ்ந்தன. பகலில் விழாததால் பெரு மளவு உயிர்சேதங்கள் ஏதுபடவில்லை என்பதுகுறிப்பிடத்தக்கது. [59]

சித்ராலயா

இடமாற்றம்

இதுவரை காலமும் கோவில்வீதி, நல்லூரில் இயங்கிவந்த எமது நிறுவனம் 05-10-92 திங்கள் முதல் ஸ்ரான்லி வீதியிலுள்ள பழைய இடத்தில் இயங்கும் என்பதை அறியத்தருகின்றோம் (சி 6856)

16ம் நாள்நினைவஞ்சலியும் சபிண்டீகரணஆத்மசாந்தி அழைப்பும்

திருமதி கேதாரேஸ்வரி தருமரத்தினஐயர்

(செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு)

பிறப்பு: 1930-02-12 இறப்பு: 1992-09-23

எமது குலவிளக்கு திருமதி கேதாரேஸ்வரி தருமரத்தின ஐயர் அவர்களின் சபிண்டீகரணம் 08-10-92 வியாழக்கிழமை காலை 7 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். இதில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை வேண்டுகிறோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சந்நிதி, தொண்டைமானாறு. (சி-6865)

ஆயுதங்களை களையவந்த இராணுவம் ஆயுதங்களை பறிகொடுத்துச் சென்றது

— திருவிலில் இளம்பரிதி

(உடுப்பிட்டி)

எமது போராட்டம் பல நெருக்கடிகளை சந்தித்தபோதெல்லாம் மக்கள் கோணமல் எம்முடன் முகம் கொடுத்திருக்கின்றனர். இதுவரலாற்று சரித்திரமிக்கது.

இவ்வாறு வல்வெட்டித்துறை திருவில் மைதானத்தில் நேற்று யாழ் மாவட்ட கடற்புலிகள் பொறுப்பாளர் திரு மறவன் தலைமையில் நடைபெற்ற 12வேங்கைகளின் 5ம்ஆண்டு நினைவுநாளின்போது யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: தென் தமிழீழத்தில் சிறிலங்கா இராணுவம் தன்னை விஸ்தரித்து இரு மைல்களுக்கு ஒரு முகாமாக அமைத்து ரோந்து புரிகின்றன. இதன் போதும் விடுதலைப் புலிகள் இராணுவத்துடன மோதி இராணுவத்திற்கு பெரும் இழப்பை ஏற்படுத்துவதோடு பல நவீன ரக ஆயுதங்களையும் கைப்பற்றி வருகின்றனர்.

எமது சுதந்திரத்தைப்பெற எத்தனையோ சுமைகள் துன்பங்களை தாங்க முயலவேண்டும். எமது இறைமையை நிலைநாட்ட எமது சொந்தக் காலில் நின்று நாங்கள் போராடவேண்டும் எங்கள் உரிமையை நாங்கவிதான் பெறவேண்டும் என்ற உண்மை இந்திய - தமிழீழப் போரின்போது மக்கள் மத்தியில் பதிந்துவிட்டது.

போராட்டத்தை ஏற்படுத்தி எமக்கு பொருளாதாரச் சுமையை ஏற்படுத்தி கஷ்டத்தை உண்டுபண்ண சிங்கள அரசு முனைகிறது. இந்த நீண்டகால யுத்தத்தின் போதும் எம்முடன் இணைந்து கொண்டே எம்மக்கள் இருக்கிறார்கள். எமது போராட்டம் ஐந்து ஆண்டுகளுக்குப்பின் நிமிர்ந்து நிற்கின்றது. இந்த உண்மையை நீங்கள் ஒவ்வொருவரும் புரிந்துகொள்வேண்டும்.

பருத்தித்துறை கடலில் வைத்து இந்த பன்னிரண்டு மாவீரர்களை சிறிலங்கா கடற்படை கைதுசெய்தது. அந்த வேளையில் சமாதானம் நிலவியது. அதனால் இவர்கள் பாரிய ஆயுதங்களை வைத்திருக்கவில்லை. சமாதான காலமாக இருந்தமையால் நாம் எதிர்க்கவில்லை. எமது துப்பாக்கியை இந்தியா மீது நீட்டவிரும்பவில்லை. இதிலிருந்து மூத்த உறுப்பினர்களின் உறுதியை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

பன்னிரண்டு வேங்கைகளின் உடல் இங்கே அன்று எரிந்து கொண்டிருந்தவேளை எமது மக்களின் உள்ளக்குமுறல்களும் எரிந்தன. அன்று தான் நாங்கள் ஆயுதம் தூக்க சபதம் எடுத்தோம். அதனைத் தொடர்ந்து இந்திய தமிழீழப் போர் கடும் உச்சக் கட்டத்தையடைந்தது எமது மக்களுக்கு எத்தனையோ நெருக்கடிகவி, சுமைகள் வந்தன. அப்போதும் எமது மக்கள் எம்மில் நம்பிக்கைவைத்து எம்முடன் இணைந்தனர். இந்த நிலையில் ஆயுதம் களையவந்த இந்திய இராணுவம் தமது ஆயுதங்களை புலிகளிடம் பறிகொடுத்த நிலையில் வெளியேறியது என்றார்.

மற்றும் திரு. போகரட்ணம் யோகி, கலை கலைபாட்டுக்கழக துணைப் பொறுப்பாளர் திரு தேவர், தமிழீழ புனரிவாழ்வுப் பொறுப்பாளர் செல்வி சுடர், தமிழீழ மாவீரர் பணியகப் பொறுப்பாளர் திரு. பொன் தியாகம், வன்னிமாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. மனோ, நிதிப்பொறுப்பாளர் திரு. பரா ஆகியோரும் உரையாற்றினர். (150)

மலிவு விலையில் ரஷ்ய யுத்த டாங்கிகளை இலங்கைராணுவம்பெறுகிறது

(கொழும்பு)

ரஷ்யா மற்றும் கிழக்கு ஐரோப்பிய கம்யூனிஸ்ட் நாடுகளிலிருந்து இலங்கை இராணுவம் மலிவான விலையில் இராணுவ தளபாடங்களை கொள்வனவு செய்து வருவதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

டாங்கிகள், ஆயுதங்கள், வெடி மருந்துகளே இவ்வாறு மலிவு விலையில் கொள்வனவு செய்யப்படுவதாகவும் அவ்வட்டாரங்கவி தெரிவித்தன.

சுமார் 450 கோடி ரூபாவிற்கு இந்த இராணுவ தளபாட கொள்வனவு இடம் பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (கி)

சைக்கிள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மேற்குப் பகுதியில் க. காங்கேசன் என்பவர் வீட்டின் உள்பகுதியில் விடப்பட்ட சைக்கிவ் களவாடப்பட்டுள்ளது.

இப்பகுதியில் அடிக்கடி திருட்டுகள் நடைபெறுவதாகத் தமக்கு தகவல்கள் கிடைத்திருப்பதாகத் தமிழீழக்காவல் துறையினர் தெரிவித்துள்ளார்கள் (வி)

அமைச்சரின் கவலை

(கொழும்பு)

கடந்த வருடம் மரநடுகை வைபவத்தின்போது ஓரிடத்தில் மரமொன்றை நட்டேன். இம்முறையும் அதேஇடத்தில் மரமொன்றை நட்டுள்ளேன். கடந்த வருடம் நான் நாட்டிய மரத்தை அந்த இடத்தில் காணவில்லை.

இவ்வாறு இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. நந்தா மத்யூ கவலை தொவித்துள்ளார்.

இதேபோன்ற பல சம்டவங்கள் பல பிரமுகர்களுக்கு ஏற்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (கி)

ஜி. சி. ஈ. (சாதாரண தர) முன்னோடி தேர்வு பரீட்சை நேர அட்டவணை

(யாழ்ப்பாணம்)

ஜி. சி. ஈ. (சாதாரண தர) பரீட்சைக்கு டிசம்பரில் தோற்றவுள்ள மாணவருக்கு முன்னோடித்தேர்வு பரீட்சை இம்மாதம் 27ம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் நவம்பர் 3ம் தேதி செவ்வாக்கிழமை வரை நடைபெறவிருக்கிறது.

முற்பகல் வேளைப்பாடங்கள் தினமும் காலை 8-30 முதல் 9-45 மணிவரையும் பின்னர் 9-45 மணிமுதல் 11-30 மணி வரையும் இரு பிரிவுகளாக நடைபெறும். பிற்பகலில் தினமும் 1-00 மணிக்கு பரீட்சை ஆரம்பமாகும்.

பரீட்சை அட்டவணை வருமாறு:

27ம் தேதி முற்பகல் தமிழ் மொழியும் இலக்கியமும் (I, II), பிற்பகல் தமிழ்மொழியும் இலக்கியமும் (III).

28ம் தேதி முற்பகல் ஆங்கிலம் (I, II), பிற்பகல் சமயம் (I, II)

29ம தேதி முற்பகல் கணிதம் (II), பிற்பகல் கணிதம் (I), தட்டெழுத்து தொகுதி (I)

30ம் தேதி முற்பகல் விஞ்ஞானம் (II), பிறபகல் விஞ்ஞானம் (I), தட்டெழுத்து தொகுதி (II)

31ம் தேதி முற்பகல் வரலாறும் சமூகக்கல்வியும் (II), பிற்பகல் வரலாறும் சமூகக் கல்வியும் (I), தட்டெழுத்து தொகுதி (III)

நவம்பர் 02ம் தேதி முற்பகல் தொழில் நுட்பப்பாடம் (I,II), கருக்கெழுத்து வர்த்தகமும் கணக்கியலும் (II), பிற்பகல் வர்த்தகமும கணக்கியலும் (I)

3ம் தேதி முற்பகல் அழகியல் (I, II), பிற்பகல் அழகியல் - சித்திரம் (III).

இந்திய கிரிக்கெட் அணியின் பெயர்கள் அறிவிப்பு

(புதுடில்லி)

தெ. ஆபிரிக்கா சிம்பாவேக்கு இம்மாத இறுதியில் சுற்றுப்பயணம் மேற்கொள்ள விருக்கும் இந்திய அணியின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளது

அஸாருதீன் (தலைவர்) கபில்தேவ், ரவிசாஸ்திரி, அஜய் ஜடேஜா, டபிள்யூ. வி ராமன், சஞ்சய் மஞ்ரேகர், ரென்டுல்கர், ஆம்ரே, மனோஜ் பிரபாகர் ஸ்ரீநாத், சேட்டன சர்மா, திலீப பானர்ஜி, வெங்கடபதி ராஜு, அனில்கும்ளே, முர்ரே விஜய் யாதவ்.

இவ் அணியில் சிறிகாந்தும், சித்துவும் சேர்த்துக்கொள்ளப் படவில்லை. (சி)

யாழ்ப்பாணத்தில் பரீட்சையை நடாத்த கோரிக்கை

(பண்டத்தரிப்பு)

"கொழும்பில் நடத்தப்பட்டுவரும் மருந்து கலவையாளருக்கான வினைத் திறமை காண் தடைப் பரீட்சையை வடபகுதியிலுள்ள மருந்துக் கலவையாளர்களின் நலன் கருதி யாழ்ப்பாணத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். போக்குவரத்து கஷ்டங்களால் பலர் இப்பரீட்சைக்கு தோற்றமுடியாது சிரமப்படுகின்றனர்''

இவ்வாறு சுகாதார அமைச்சிடம் கோரும் முக்கிய தீர்மானம் கடந்தவாரம் நடைபெற்ற மருந்துக் கலவையாளர்கள் சங்க யாழ் கிளையின் 19வது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் ஏகமனதாகநிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட மருந்துக் களஞ்சிய கட்டிடத்தில் கடந்த 27-9-92ம் திகதி கிளைத்தலைவர் திரு. சி திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், கொழும்பிலுள்ள சுகாதாரத் தலைமைப் பீடத்தினால் வெளியிடப்படும் சுற்று நிருபங்கள் யாழ். மாவட்டத்திலுள்ள சுகாதார நிறுவனங்களுக்கும், அரசாங்க வைத்தியசாலைகளுக்கும்உரியகாலத்தில் கிடைப்பதில்லை என்றும் பல சுற்று நிருபங்கள் இங்கு கிடைக்காமல் போகின்றபடியால் எதிர்காலத்தில் முறையாக இவற்றை அனுப்பி வைக்குமாறும் கோரும் மற்றொரு தீர்மானம் உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப பட்டன.

புதுவருட நிர்வாகிகவ் தெரிவு நடைபெற்றபோது தலைவராக திரு. பி. சோமாஸ்கந்தனும், செயலாளராக 19வது தடவையாக மீண்டும் திரு.என்.எம். கந்தசாமியும், பொருளாளராக திரு. ஐ. அருளானந்தமும் தெரிவு செய்யப்பட்டனர். (72)

உழவு யந்திரங்களை விடுவிக்க அமைச்சர் அவசர உத்தரவு

(வவுனியா)

வவுனியாவில் இராணுவத்தினால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நூற்றுக்கும் மேற்பட்ட வடபகுதி விவசாயிகளின் உழவு இயந்திரங்களை உடனடியாக உரியவர்களிடம் ஒப்படைக்கும்படி புனரிவாழ்வு, புனரமைப்பு அமைச்சர் திரு. பி. தயாரத்ன உத்தரவிட்டுள்ளார்.

இதுசம்பந்தமாக அண்மையில் கொழும்பில் நடைபெற்ற கூட்டமொன்றில் மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது

தடுத்து வைக்கப்பட்டுள்ள உழவு இயந்திரங்கவ் பற்றி அமைச்சர் தயாரத்ன சம்பந்தப்பட்ட இராணுவ அதிகாரியிடம் கேட்டபோது இது குறித்து தமக்கு ஒன்றும் தெரியாது என்றும் உழவு இயந்திரங்களின் உரிமையாளர்களின் விபரங்களை தமக்கு தந்தால் அவற்றை உடனடியாக விடுவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகக் கூறினர். (வி)

1070 தமிழ் இளைஞர்கள் 4 வருடமாக தடுத்துவைப்பு

(கொழும்பு)

இலங்கையிலுள்ள 140 பொலிஸ் நிலையங்களிலும், 11 இராணுவ முகாம்களிலும் 850 தமிழ் இளைஞர்கவ் கடந்த நான்கு வருடங்களாக எதுவித விசாரணையுமின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக மனித உரிமைக்குழு அரசின் கவனத்துக்கு கொண்டு வந்துவிளது.

வவுனியா, மட்டுநகர், அம்பாறை, பொலனறுவ ஆகிய இடங்களிலிருந்து 1989ம் ஆண்டிலிருந்து கைதுசெய்யப்பட்ட தமிழ் இளைஞர்களே இவ்வாறு எதுவித விசாரணையுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் குழு அரசாங்கத்துக்கு அறிவித்துள்ளது.

இதேநேரம் களுத்துறை வடக்கிலுள்ள ஸ்ரீலண்டா வத்தை தடுப்பு முகாமில் 220 தமிழ் வாலிபர்கள் எதுவித விசாரணையுமின்றி நீண்டகாலமாக தடுத்துவைக்கப்பட்டிருப்பதாகவும் அவர்கவ் மேலான விசாரணைகளை துரிதப்படுத்த உத்தரவிடுமாறு சட்டத்தரணி மோதிலால் நேரு ஜனதிபதி பிரேமதாசாவிடம் கோரியுள்ளார்.

முழு விபரங்களையும் கேட்டறிந்த ஜனதிபதி விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிடுவதாகவும் திரு. மோதிலால் நேருவிடம் தெரிவித்துள்ளார். (வி)

கண்காட்சி

(கொட்டடி)

யாழ்ப்பாணத்தில் புற்றுநோய் தடுப்புச் சங்கமொன்று அமைக்கப்பட்டுள்ளது. இச்சங்கத்தின் தலைமை அலுவலகம் யாழ். பிரதான வீதியில் உள்ள அமரர் வைத்தியகலாநிதி பிலிப் மருத்துவமனைக் கட்டிடத்தில் இயங்கிவருகின்றது.

புற்றுநோய் தடுப்புச்சங்கத்தின் காரியாலயததில் காலை முதல் மாலைவரை புற்றுநோய் பற்றிய புகைப்படக்கண்காட்சியும் புற்றுநோய் தடைசெய்வதுபற்றிய பூரணமான விளக்கங்களுடனான சித்திரங்கவ் அடங்கியவிளக்கப் படங்களுடனான கண்காட்சிகளும் இடம் பெற்றுவருகின்றன. (75)

வீதி விபத்து அதிகரிப்பு

(அரியாலை)

போக்குவரத்து விதிகளையும் ஒழுங்கு முறைகளையும் மீறி வேகமாகச் செல்லும் வாகனங்களால் வீதிவிபத்துக்கள் அதிகரித்து வருகின்றன.

கடந்த 2ம் திகதி காலையில் வெலிங்டன் சந்தியிலும் பகல் யாழ் முலவைச் சந்தியிலும் இரு வீதிவிபத்துக்கள் நடைபெற்றன. முலவைச் சந்தியில் மோட்டார் சைக்கிள் வான் விபத்தில் மோட்டார் சைக்கிளில்வந்தவர் காயமுற்றுயாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டார். (59)

தஞ்சையில் புலிகளின் ஆதரவாளர் கைது

(சென்னை)

தஞ்சை மாவட்டத்தில் புலிகளின் ஆதரவாளர் எனக் கருதப்படும் இளைஞர் ஒருவரை தமிழக பொலிஸார் கைது செய்துள்ளனராம்

இவரிடமிருந்து வெளிநாட்டு துப்பாக்கி 140 ரவுண்ட் தோட்டாக்கள், டெற்றனேற்றேர்கள், சயனைட்டுகள் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தஞ்சையில் அண்மையில் பொலிஸார் திடீர் தேடுதல்களை நடாத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

குமாரி 9-ம் திகதி பருத்தித்துறை வருகிறது

(யாழ்ப்பாணம்)

குமாரி கப்பல் நேற்று கொழும்பிலிருந்து புறப்பட்டுள்ளதாக, யாழ். அரச அதிபர் திரு. கா மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

இக்கப்பல் திருமலைக்குச் சென்று, ஆயிரம் மெற்றிக் தொன் மாவை ஏற்றிக் கொண்டு எதிர்வரும் 9-ம் திகதி மாலை, அல்லது 10-ம் திகதி காலை பருத்தித்துறை துறைமுகத்துக்கு வந்துசேருமென, அரச அதிபர் மேலும் கூறினார்.

இதேநேரம் மேலதிகமாக கப்பல் மூலம் மாவை இறக்கும்படி அத்தியாவசியசேவைகள் நாயகத்திடம், யாழ். அரச அதிபர் வேண்டுகோள் விடுத்தபோது, அதற்கு உடனடியாக முற்பணம் வழங்கப்பட்டாலே மா அனுப்பிவைக்கப்படுமென தெரிவித்ததைத் தொடர்ந்து முற்பணம்அனுப்புவதற்கு தற்போது ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அரச அதிபர் தெரிவித்தார். (வி-157)

இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழகம் நடாத்தி வரும் உதைபந்தாட்ட நொக்கவுட் போட்டியின் இன்றைய ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் கழகத்தை எதிர்த்து அரியாலை ஐக்கிய கழகமும் மோதும் (வி)

சர்வதேச ஆசிரியர் தினம்

(கொழும்பு)

சர்வதேச ஆசிரியர் தினம் நேற்று கொண்டாடப்பட்டது.

உலகம் முழுவதிலுமுள்ள சுமார் ஒரு கோடியே 30 லட்சம் ஆசிரியர்கள் இத்தினத்தை நேற்றுக் கொண்டாடினார்கள். (வி)

இன்றைய பலன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தனுசு: சுபகாரியம், திட்டம் நிறைவேறல், மனக்களிப்பு

மகரம்: குடும்பமுரண்பாடு, மனக்குறை, தடுமாற்றம்.

கும்பம்: காரிய அனுகூலம், புதிய தொடர்பு தெய்வீக செலவு.

மீனம்: உஷ்ண வியாதி, காரியதாமதம் யோசனை.

ஜோஸ்யர்

மீட்பு நிதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மீட்பு நிதியாக 10 000/- ரூபா பணமாக மட்டுமே பெற்றுக் கொள்ளப்படும். பவுண் நகைகளோ, காசோலைகளோ பெற்றுக்கொள்ளப் படமாட்டாது என்பதனை மீட்பு நிதி செலுத்தவுள்ளோர் கவனத்தில் கொள்ளுமாறு வேண்டப்படுவதாக நிதித் துறை மேலும் அறிவித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வைத்திய வசதியின்றி மக்கள் அவதி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த வாகரை, பணிச்சங்கேணி, கதிரவெளி, மாங்கேணி ஆகிய தமிழ்க் கிராமங்களில் வாழும்தமிழர்கள் வைத்திய வசதிகள் இன்றி பெரும் இன்னல்களை அனுபவித்துவருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இப்பகுதிகளில் உள்ள வைத்திய சாலைகளுக்கு செல்லும் வைத்தியர்கள் ஸ்ரீலங்காப் படையினரால் தடுக்கப்பட்டு வருவதாகவும் மற்றும் தேவையான மருந்து வகைகளை குறிப்பிட்ட பகுதிகளுக்கு அனுப்புவதற்கு ஸ்ரீலங்கா அரசு தயக்கம் காட்டிவருவதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளையில் வாகரையில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் இராணுவ முகாம் அங்கு வாழும் தமிழர் மத்தியில் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதாகவும் கூறப்படுகிறது. (க)

வடபகுதி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பெட்டிகள் மற்றும் வேறு சில பாடசாலை உபகரணங்கள் அடங்கிய தனித்தனியான பிளாஸ்ரிக் பைகளில் அடைக்கப்பட்ட பத்தாயிரம் பாக்கட்டுகளை கொழும்பிலுள்ள தொண்டர் ஸ்தாபனம் ஒன்று வடபகுதிக்கு அனுப்பி வைக்கும்படி கல்வி இலாகாவிடம் ஒப்படைத்தது.

மேற்படி பாக்கட்டுகள், கொழும்பிலுள்ள கல்வி இலாகாவின் ஒரு பகுதியில் வைத்து பிரித்து அதனுள்ளிருந்த கலர்ப்பெட்டிகள், கொம்பாஸ் பெட்டிகளை அப்புறப்படுத்தி விட்டு மற்றைய பொருட்களை மட்டுமே இங்கு அனுப்பியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

கொழும்பிலிருந்து கப்பல் மூலம் மிகவிரைவில் இங்கு அனுப்பப்பட இருக்கும் இந்த பாடசாலை உபகரணங்களில் செய்யப்பட்ட மோசடி வேலைகள் பற்றி, சம்பந்தப்பட்ட தொண்டர் ஸ்தாபனத்தின் யாழ் கிளை அதிகாரியின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. (வி)

வரவுசெலவுத்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

1992-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புச் செலவுகளுக்காக 1500 கோடியே ஒதுக்கப்பட்டது. பின்னர் இந்தத் தொகை 1900 கோடி ரூபாவாக அதிகரிக்கப்பட்டது. புதிய வரவு செலவுத் திட்டத்தில் இந்தத் தொகை 2000 கோடி ரூபாவுக்கு மேற்பட்டதாகவே இருக்குமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

இதேவேளையில் நாடாளுமன்றத்தில் பிரதமரும் நிதியமைச்சருமான திரு டி. பி. விஜயதுங்கா நேற்றுக்கான 1993 நடப்பாண்டுக்கான நிதி ஒதுக்கீட்டு சட்டமூலத்தைச் சமர்ப்பித்தார்.

இந்தச் சட்ட மூலத்தின்படி அரசாங்கத்தின் நிதிச்செலவினம் 11,240 கோடியே 38 லட்சத்து 13 ஆயிரம் ரூபாவாகும். 1993ம் ஆண்டிற்கு நிதி அமைச்சிற்கான ஒதுக்கீடு 779 கோடியே 10 லட்சத்து 298 ஆயிரம் ரூபா. துண்டு விழும் தொகை 4,640 கோடி ரூபா.

நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள சில துறைகளும் அவற்றுக்கான ஒதுக்கீடும் வருமாறு:

★ காணி, நீர்ப்பாசன மகாவலி அபிவிருத்தி அமைச்சு 521 கோடியே 88 லட்சத்து 36 000 ரூபா.

★ சுகாதார மகளிர் விவகார அமைச்சு 511 கோடியே 262 லட்சத்து 73 ஆயிரத்து 500 ரூபா.

★ உணவு, கூட்டுறவுத் துறை அமைச்சுக்கு - 460 கோடியே 75 லட்சத்து 27 ஆயிரம் ரூபா.

★ ஜனசக்தி திட்டத்திற்காக 455 கோடியே 66 லட்சத்து 58 ஆயிரம் ரூபா.

★ வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சு 425 கோடியே 39 லட்சத்து 48 ஆயிரம் ரூபா. (சி)

நீதியரசர் ஓய்வுபெறும் வயது நீடிக்கப்படும்?

(கொழும்பு)

உயர் நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வுபெறும் வயது 61 ஆக அதிகரிக்கும் வகையில் நீதித்துறையில் மாற்றம் செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

அத்துடன் மேல் நீதிமன்ற நீதியரசர்கள் விரும்பினால் 61 வயதில் ஓய்வு பெற்றுச் செல்வதற்கும் வகை செய்யப்படும் என்றும் கூறப்படுகிறது. (க)

பூநகரியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தனர்.

காயமடைந்த இரு படையினரும் பலாலி இராணுவ ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். ஒருவர் இராணுவ ஆஸ்பத்திரியில் இறந்ததாக அந்த அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். [க]

ஜனாதிபதிக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டது.

கொழும்பு சிறும்பும் வழியில் சென்னை விமான நிலையத்தில் ஜனாதிபதி தம்பதியினர் சுமார் 1 மணிநேரம் தங்கியிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது

சென்னை விமான நிலையத்தில் ஜனாதிபதி தம்பதியரை வரவேற்பு அதிகாரி இராஜலிங்கம், தமிழக காவல்துறை டைரக்டர் ஜெனரல் உட்பட பல பிரமுகர்கள் வரவேற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி பிரேமா பாகிஸ்தான் இந்தியா, பூட்டான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது. [க]

கூட்டுறவு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டுமென்றும் கூறப்படுகிறது.

மண்ணெண்ணை மற்றும் பொருள்களைக் கொழும்பிலிருந்து கொண்டுவர விரும்புவோர் உடனடியாகத் தம்முடன் தொடர்பு கொள்ளும்படி யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் கேட்டுள்ளார். (வி)

மண்ணெண்ணெய்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளதாக தெரியவருகிறது.

அத்தியாவசிய சேவைகள் நாயகம் திரு. ராசி உடன் நேற்றுஅவசரமாகத்தொடர்பு கொண்ட யாழ். அரச அதிபர் மேற்படி பொருட்களை இங்கு தாமதமின்றி அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொண்டதாகவும் தெரியவந்துள்ளது. 157

கிளாலிப் பகுதியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவ அதிகாரிகள் நேற்று கொழும்பில் தெரிவித்தனர்.

இந்தப்பகுதியில் 8 வள்ளங்கள் பயண செய்ததாகவும் மேலும் இரு படகுகள் பாதுகாப்புக்காக சென்றதாகவும் அழிக்கப்பட்ட வள்ளங்களில் ஒன்று பாதுகாப்புக்காக சென்ற வள்ளம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

10 குதிரைச் சக்தி கொண்ட மோட்டார் இயந்திரங்களைக் கற்படையினர் கைப்பற்றியுள்ளதாகவும் ஒவ்வொரு வள்ளத்திலிருந்தும் ஒரு மோட்டார் இயந்திரங்கள் பொருத்தப்பட்டிருந்ததாகவும் படை அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர் (க)

சார்க் தலைவர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பி. பி. ஸி. நேற்று தெரிவித்தது சார்க் நாடுகளின் தலைவர் என்ற முறையில் அண்மையில் மேற்படி இரு நாடுகளுக்கும் விஜயம் செய்தபோது ஜனாதிபதி பிரேமதாசா, சார்க்உச்சி மகாநாடுகள் நடைபெறும் வேளைகளில் இந்திய-பாகிஸ்தான் பிரச்னைகளைப் பரிசீலித்து தீர்த்துக்கொள்ள வேண்டும் என்று கூறிய ஆலோசனையை இந்தியா முற்றுகவே நிராகரித்துவிட்டதாகவும், இவ்விரு நாடுகளுக்குமிடையே போட்டி, பொறாமை, பூசல்கள் உள்ளவரை 'சார்க்கின்' பொருளாதார நிலை மந்தமாகவே இருக்கும், என்று பி. பி. ஸி. கருத்துத் தெரிவித்துள்ளது' (வி)

31-ம் நாள் நினைவஞ்சலி



அமரர்

இராஜரத்தினம் அன்ரனி ரமேஸ்

அன்னையின் மடியில் 22-10-72 ஆண்டவன் அடியில் 07-09-92

எம்மை ஆறுத்துயரில் ஆழ்த்தி
மீளாத்துயில் கொண்டு விட்டாய்
தேறுதல் சொல்ல வகையின்றி தவிக்கிறோம்
மாறாது உன் நினைவு எம் உள்ளமதில்

உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

உமது பிரிவால் துயருறும்

அம்மா, சகோதரர்கள், சகோதரிகள்
உற்றார். உறவினர். நண்பர்கள்.

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய். (சி-6863)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1992ம் ஆண்டு அக்டோபர் மாதம் 7ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post office, Sri Lanka under Licence Number B / 10336/8.

மரண அறிவித்தல்

K. L. வில்லியம்

(யாழ். நியூசிற்றி பேக்கரி உரிமையாளர்)

யாழ் நியூசிற்றி பேக்கரி உரிமையாளர் K. L. வில்லியம் காலமாகிவிட்டார். இவர் றூபியின் அன்புக் கணவரும், றூபன், அனுரன், நிமால் (பிரான்ஸ்) ஜயந்தி, ரகு, ரவி (பிரான்ஸ்), சுஜிவா, மாலினி, ஆகியோரின் அன்புத் தந்தையும், காலம் சென்ற பிரான்சிஸ், முத்து ஆகியோரின் அன்பு மருமகனும் செபநேசன், றுஜினி, யூலி ஆகியோரின் அன்பு மாமனாரும், தேவதாஸ், அமலன் பிரான்ஸ், குணசீலி ஆகியோரின் மைத்துனரும், பேன்றொசன், அருண், யுடின், ஆலின் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் 07-10-92 (இன்று) புதன் கிழமை பி. ப. 3-30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இருந்து நல்லடக்கத்திற்காக பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: W றூபன்

No:- 5 புதிய வீடமைப்புத்திட்டம்,
குருநகர், யாழ்ப்பாணம். (சி-6864)